இணைப்பு II

[14 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 782க்கான விடையைக் காண்க]

விடை—

(அ) 1977–78-ல் உற்பத்தியான உரத்தின் அளவு:

(1) தனியார் துறை:

	(மெட்ரிக் டன்களில்)
(அ) யூரியா	37,45,000
(இ) அம்மோனியம் சல்பேட்டு	ஏதுமில்லை
(உ) அம்மோனியம் பாஸ்பேட்	5,42,000
(ஊ) சூப்பர் பாஸ்பேட்	3,23,000

(2) பொதுத்துறை:

(அ) யூரியா	20,64,000
(இ) 17:17:17 கலப்பு உரம்	38,38,000

(ஆ) 1957-ம் ஆண்டு உரக்கட்டுப்பாடு உத்தரவுப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கும் தொகுப்பு இரசாயன உரங்களுக்கு (Pool Chemical Fertilisers) தரவாரியாக அடிப்படை வழங்குவிலைகளை (Pool Issue Prices) அறிவிக்கிறது. அதனடிப் படையில் விற்பனை வரி, உபரி வரி, நிர்வாகச் செலவு, இருப்பு வைப்பவர் கமிஷன் மற்றும் உரங்களை வழங்குவதற்காக மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லரை விற்பனையாளர்களுக்கும் அனுமதிக்கப்படும் கமிஷன் தொகை உட்பட கடைசியாக விவசாயி கையில் உரம் சேரும்போது இருக்கவேண்டிய உச்ச விற்பனை விலையை மாநில அரசு நிர்ணயிக்கிறது. மாநில அரசுக்கு தொகுப்பு உரத்தின் அடிப்படை விலையை நிர்ணயிக்கும் அதிகாரமில்லை. இப்படி நிர்ணயிக்கப்பட்ட உச்ச விலைகளுக்கு மேல் எவரும் உரங்களை விற்கக் கூடாது. உர உச்ச விற்பனை விலை, உரங்களை மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லரை விற்பனை யாளர்களுக்கும் அனுமதிக்கப்படும் கமிஷன் தொகையையும் (Distribution margin allowed to wholesalers and retailers) சேர்த்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இப்படி அனுமதிக்கப்படும் கமிஷன் உரத்திற்கு உரம் மாறுபடும்,

[1979 ஏப்ரல் 23

தங்கள் உர விற்பனையைப் பெருக்குவதற்காக உர உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும் விவசாயிகள் தங்கள் உரங்களை வாங்க ஊக்குவிக்கும் வகையில் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கமிஷனில் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்து (foregoing a portion of the distribution margin) அதற்கொப்ப உர விலைகளைக் குறைத்து விற்கின்றனர். இப்படி விற்பதானது கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனைச் சாலைகளில் விற்கப்படும் ஒரே ரக உரங்களின் விற்பனை விலைகளில் சிறு வித்தியாசம் ஏற்பட வழி கோலுகிறது. எனினும் இது உர உச்ச விலைக்குட்பட்டே நடக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
4 - DEC 1979
MADRAS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS